அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 77/2017
தேதி : 31/08/2017

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர், திரு.ஆர்.சரத்குமார் அறிக்கை.**

கடலில் வசிக்கும் திமிங்கலங்கள் மனித உயிர்களுக்கு ஆபத்து விளைவிப்பவை - அதுவும் மனிதர்கள் கடலில் பயணம் செய்யும்போதுதான் அத்தகைய ஆபத்து.

ஆனால் திமிங்கலத்தின் பெயரில் “நீலத்திமிங்கலம்” (Blue Whale) என்ற விளையாட்டு சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் வாழ்க்கையை பறித்து வருகிறது என்ற செய்தி தொடர்ந்து அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. இந்த அதிர்ச்சிக்கு அடிப்படை காரணம் இந்த விளையாட்டின் முடிவில் விளையாடுபவர்களுக்கு மன அழுத்தம் ஏற்பட்டு தற்கொலைக்கு தூண்டப்படும் விபரீதம்தான். நீண்ட நாட்களாக இவ்விளையாட்டின் விபரீதம் குறித்து பேசப்பட்டு வந்தாலும், தமிழகத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறவில்லை என்று சொல்லப்பட்டு வந்தது. ஆனால் மதுரை திருமங்கலத்தில் விக்னேஷ் என்ற கல்லூரி மாணவர் இந்த விளையாட்டால் தற்கொலை செய்துகொண்டுள்ளார். என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. இந்த விளையாட்டு மேலும் பரவி, சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் வாழ்க்கையைப் பறிக்கத் தொடங்கும் முன் இவ்விளையாட்டிற்கு தடை விதிக்கவேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் நீண்ட நேரம் செல்போன்களில் ஐக்கியமாகிறார்கள் என்றால் அதை உடனடியாக கவனித்து தடுத்து நிறுத்தவேண்டும். ப்ளூவேல் விளையாட்டின் செயலி பதிவிறக்கம் செய்யமுடியாதபடி அரசு Cyber Crime அமைப்பு மூலம் உடனடியாக நடவடிக்கை எடுத்து அச்செயலியை செயலிழக்கச் செய்யவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
தலைவர் - பொதுச்செயலாளர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com